DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-27/2022

Prosecution witness – PW 2

| | | |
|---|---|---|
| Name | : திரு.ராமச்சந்திரன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1 present, A3 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)

02.12.2025– 03.45 PM

முதல் விசாரணை:–

1. நான் சாயல்குடியில் குடியிருந்து ஒர்க்ஷாப் வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியாது. அ.சா.1 ஐ தெரியாது. பட்டியல் சாட்சி 3 உதயகுமாரை எனக்கு தெரியும்.

2. கடந்த 24.06.2021ந் தேதியன்று நானும், உதயகுமார் இலந்தைகுளம் ரோடு கடற்கரை அருகே உள்ள பனந்தோப்பில் நுங்கு வெட்டிக் கொண்டிருந்தேன். அப்போது மதியம் சுமார் 02.00 மணியளவில் அங்கே இருந்த நபர்களில் ஒருவர் செல்போனை பறித்துக்கொண்டு அவரை அடித்துவிட்டதாக சொன்னார்கள். யார் யாரை தாக்கினார்கள் மற்றும் இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது.

பிறழ் சாட்சி:–

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

3. கடந்த 24.06.2021ந் தேதி நானும், உதயகுமாரும் இலந்தைகுளம் ரோட்டில் உள்ள நடராஜர் செட்டியார் என்பவரின் பனங்காட்டிற்கு அருகே மதியம் 02.00 மணியளவில் நுங்கு சாப்பிட்டுக் கொண்டிருந்தோம் என்றால் சரிதான். எனக்கு ஏற்கனவே நன்கு தெரிந்து கொண்டுநல்லாம்பட்டி

கிராமத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் மகன் ஜார்ஜ்துரை, எம்.கரிசல்குளத்தை சேர்ந்த காளிமுத்து மகன் நந்தாவும் அங்கு இருந்தார்கள் என்றால் நான் அவர்களை பார்க்கவில்லை. நாங்கள் அங்கு இருந்த போது கொண்டு நல்லாம் பட்டியை சேர்ந்த எதிரி வினித் என்ற சூர்யா 25 வயது மதிக்கத்தக்க ஒரு நபரை இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பார்க்கவில்லை. அவருடன் மேலும் 2 நபர்கள் சேர்ந்து கீழே கிடந்த கருக்கு மட்டையால் வினித்துடன் வந்த நபரை உடம்பில் மாறி மாறி தாக்கியதாகவும், அந்த நபர் கழுத்தில் அணிந்திருந்த தங்கச்செயினையும், செல்போனையும் பறித்துவிட்டு சென்றுவிட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதன் பின்பு எதிரிகள் மூவரால் தாக்கப்பட்ட நபர் தனிஸ்லாஸ் மகன் குருவையா என பின்னர் தெரிந்து கொண்டதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணயில் இவ்வழக்கு சம்பவம் பற்றியும் எதிரிகள் பற்றியும் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி